## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 15.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களுக்கான திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்வதற்கு அதிக அளவு நிதி ஆதாரங்களை திரட்டுவதில் வணிகவரித் துறையும், பதிவுத் துறையும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இப்படிப்பட்ட இன்றியமையாத் துறைகளின் பணிகளை எளிதாக்கும் வண்ணம், இத் துறைகளின் அலுவல்களை கணினிமயமாக்கவும், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டவும் எனது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த வகையில், கடந்த ஆண்டு, 15 இடங்களில் உள்ள 34 அலுவலகங்களுக்கு 20 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்ட எனது தலைமையிலான அரசு ஆணையிட்டது. நடப்பாண்டில், ராணிப்பேட்டை, விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, அரூர், அரியலூர், திருப்பூர், அம்பாசமுத்திரம், நாங்குநேரி மற்றும் திருச்செந்தூர் ஆகிய 10 இடங்களில் உள்ள 16 வணிகவரி அலுவலகங்களுக்காக 12 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில், சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிகர்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராவதற்கான சில நிபந்தனைகளை எனது தலைமையிலான அரசு தளர்த்தியுள்ளதையடுத்து, இவ்வாரியத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை கருத்தில் கொண்டு, அரசால் வழங்கப்படும் தொகுப்பு நிதி 2 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, பாரம்பரியம் மிக்க துறையான பதிவுத் துறை அலுவலகங்கள் அனைத்தும் தனியார் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசு கட்டடங்களில் இயங்கி வருவதைக் கருத்தில் கொண்டு, வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டு காலத்திற்குள் சொந்தக் கட்டடங்களைக் கட்ட எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது.

இதன் அடிப்படையில், முதற்கட்டமாக 26 கோடி ரூபாய் செலவில் 52 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு கடந்த ஆண்டில் சொந்த கட்டடம் கட்ட நான் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளேன். இதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டு 2012–2013–ல் தென் சென்னை, செங்கல்பட்டு, அரக்கோணம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், நாமக்கல், தர்மபுரி, அரியலூர், மயிலாடுதுறை, சேரன்மகாதேவி, மார்த்தாண்டம், பழனி, ராமநாதபுரம், கும்பகோணம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 17 இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒருங்கிணைந்த வளாகங்களில் மட்டும் 27 சார் பதிவாளர் அலுவலகங்கள் அமையப் பெறும். மேலும் கோவையில் கட்டப்படும் ஒருங்கிணைந்த வளாகத்தில் துணைப் பதிவுத்துறை தலைவர் அலுவலகம், மண்டல உதவி பதிவுத்துறை தலைவர் மற்றும் மாவட்ட பதிவாளர் (புலனாய்வு) அலுவலகங்களுக்கான கட்டடங்களும் இடம் பெறும். இந்த 27 சார்பதிவாளர் அலுவலகங்கள் மட்டுமல்லாது, மேலும் 48 சார்பதிவாளர் அலுவலகங்களுக்குத் தனித் தனியாக சொந்தக் கட்டடம் கட்டப்படும். இக் கட்டடப் பணிகள் அனைத்தும் 41 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும்.

மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் முத்திரைத் தீர்வையை விதிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் விகிதங்களுக்காக தனியே முத்திரைச் சட்டத்தினை இயற்றியுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் மத்திய சட்டமான 1899–ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் தான் பின்பற்றப்படுகிறது. இதன் விளைவாக, பொது மக்கள் நலன் கருதி மாநில அரசு ஏதாவது மாற்றம் செய்ய விரும்பினால், அதற்கான சட்டமுன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலை பெறக்கூடிய சூழ்நிலை நிலவுகிறது. இந்தக் காலதாமதத்தினை தவிர்க்கும் வகையில், நமது மாநிலத்திற்கென தனியாக ஒரு முத்திரைச் சட்டம் இயற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் வழிகாட்டி மதிப்பின் உயர்வினால் ஏழை, எளிய மக்கள் பாதிக்காத வண்ணம் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு 5,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*******